SC. 37/2024

**நாள் : 25.06.2024**

**Pw.4 லெட்சுமி**

**எதிரி ஆஜர்.**

**சாட்சி மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

பரமசிவம் என் கணவரின் உடன் பிறந்த சகோதரர். அ.சா.3 மீனாட்சி என் கணவரின் உடன் பிறந்த சகோதரி. அ.சா.5 மங்கேஸ் என் மகன். இன்று என்னுடன் பரமசிவம் வந்துள்ளார். அ.சா.5 விசாரிக்கப்பட்ட நாளிலும் பரமசிவம் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். எங்கள் தெருவில் முதல் வீட்டில் எதிரியும், அவரது கணவரும் குடியிருந்து வருகிறார். அதற்கு அடுத்து எதிரியின் கணவரின் சகோதரர் வீடு உள்ளது. அதை அடுத்து தென்வடலாக தெரு உள்ளது. அதற்கு மேற்கே பேச்சியம்மாள், மாரியப்பன் வீடு உள்ளது. அதற்கு மேற்கே சாட்சி வேலுசாமி வீடு உள்ளது. சாட்சி வேலுசாமி என் கணவரின் சகோதரர். பேச்சியம்மாள், மாரியப்பன் வீட்டிற்கு எதிர்புறம் அ.சா.1 பரமசிவம் மற்றும்அவரது மனைவி குடியிருந்து வருகிறார். எதிரிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் 2 மாத கைகுழந்தை என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு கைகுழந்தை இருப்பதால் அந்த வீட்டில் தொட்டில் கட்டப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரிதான். பொதுவாக புதிய குழந்தை பிறந்த வீட்டிற்கு மற்ற குழந்தைகளை அதிகம் அனுப்பமாட்டார்கள் ஏன் என்றால் குழந்தைக்கு சீர் பிடித்து கொள்ளும் என்பதால் அனுப்பமாட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அ.சா.1, 2 க்கு முதல் இருகுழந்தைகளும் பெண் குழந்தைகள் என்றால் சரிதான். அ.சா.1, 2 ஆகியோருக்கு முதல் இருகுழந்தைகளும் பெண் குழந்தைகள் என்பதால் 3 வது குழந்தை ஆண்குழந்தையாக பிறக்கவேண்டும்என்று

பல கோவில்களுக்கு சென்று வேண்டி கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். அதன்பின்னர் 7 ஆண்டுகள் கழித்து இறந்துபோன கவினா என்பவர் அ.சா.1, 2 க்கு பிறந்தனர் என்றால் சரிதான். அ.சா.1, 2 க்கு 3 வதாகவும் பெண் குழந்தை பிறந்துள்ளது என்று மனவருத்தத்தில் இருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் என்னிடம் அவ்வாறு சொன்னதில்லை. நான் கூறுவது தவறு என்றும், அ.சா.1, 2 க்கு 3-வதாக பெண் குழந்தை பிறந்துவிட்டதால் மன வருத்ததில் வாழ்ந்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. கவினாவை அ.சா.1,2 அங்கன்வாடி பள்ளிக்கு அனுப்பவில்லை. அந்த குழந்தையை அவர்கள் இருவரும் கண்டுகொள்வதும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3 வதாக பெண் குழந்தை பிறந்துவிட்டது என்பதால் அ.சா.1, 2 சரிவர கவனிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி திருமணத்திற்கு முன்பு எங்களது உறவினர் அல்ல. அன்னியர்தான். எதிரியின் கணவர் எதிரியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். எதிரியின் கணவர் பழனிசாமியை அவரது அத்தை மகளை திருமணம் செய்து கொள்ளும்படி கூறிவந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியின் கணவருக்கு நாங்கள் பெண் பார்க்கவில்லை. எதிரியின் கணவரது அத்தை மகளை அவருக்கு திருமணம் செய்து வைக்க முன்னதாக பேச்சிவார்த்தை நடந்தது என்றும், ஆனால் எதிரியின் கணவர் எங்கள் குடும்ப உறவினர்களின் விருப்பத்திற்கு மாறாக எதிரியை திருமணம் செய்து கொண்டதால் எதிரி மீது எங்களுக்கு விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. அருணாசலம் - சுப்பம்மாள் மகளை திருமணம் செய்து கொள்ளாததால் குடும்ப உறுப்பினரான

மீனாட்சி, வேலுசாமி ஆகியோருக்கு எதிரி மீது விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், தொடர்ச்சியாக விரோதம்இருந்ததால் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் குழந்தைக்கு முதல் முடி இறக்குவதற்கு நாங்கள் சென்றோமா என்றால் அவர்கள் எங்களை அழைக்கவில்லை. அதனால் நான் செல்லவில்லை. மற்றவர்கள் சென்றார்களா என்று எனக்கு தெரியாது. சாட்சி வேலுசாமி, மீனாட்சி, அ.சா.1, 2 ஆகியோர்களும் செல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு முன்பாகவே எங்களுக்கும், எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றும்,அதனால்தான் நாங்கள் முடி இறக்கும் நிகழ்ச்சிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் பழனிசாமி எதிரியை அந்த குழந்தை பிறப்பதற்கு முன்பு 9 வது மாதம் வரை எங்கள் ஊரில்தான் வைத்திருந்தார். குழந்தை பிறப்பதற்கு சில தினங்களுக்கு முன்பாகதான்அவரது மனைவியை பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். கவினா இறப்பதற்கு ஒரு வாரம் முன்புதான் பழனிசாமி அவரது மனைவியை அழைத்து வந்தார் என்றால் சரிதான். 09.09.2019 ம் தேதி காலை 9 மணியளவில் நான் எனக்கு சொந்தமான மாடுகைடிள மேய்ச்சலுக்காக காட்டிற்கு பத்தி சென்று, மதியம் 2 மணி முதல் 2.30 மணியளவில் திரும்பவந்தபோது என் வீட்டிற்கு அருகில் கூட்டமாக இருந்தது என்று ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் என்னவென்று கேட்டப்போது கவினா இறந்துவிட்டாள் என்று கூறினார்கள் எப்படி இறந்தாள் என்று கேட்டேன், முனிஸ்வரி வீட்டிற்கு கவினாவை அழைத்து சென்றாள் அதன்பின் எப்படி கவினா இறந்தார் என்று தெரியாது என்று கூறினார்கள்

என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை. எங்கள் ஊரில் சிறிய பிரச்சனை என்றாலும் அதை ஊர்பெரியவர்கள் முன்பு பேசி முடிப்போம் என்றால் சரிதான். சம்பவ தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நானும், சாட்சி மீனாட்சியும், எதிரியும் பேசிக்கொண்டிருந்தபோது எங்களிடம் எப்போதும் கவினாவைதான் என் கணவர் துக்கி கொண்டு திரிகிறார் என்று முனீஸ்வரி என்னிடம் கூறினார் என்று போலீசார் விசாரணையில் நான் கூறினேனா என்றால் கூறவில்லை. நானும், மீனாட்சியும் எப்போதும் பேசிக்கொள்வதில்லை. கவினா இறப்புக்கு முன்பும், தற்போதும் வரை சுமாராக 10 ஆண்டுகளாக நானும், சாட்சி மீனாட்சியும் பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான். நானும், எதிரியும் பேசிக்கொள்வோம். ஆனால் நானும், மீனாட்சியும், எதிரியும் சேர்ந்து ஒருநாளும் பேசிகொண்டதில்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு நானும், மீனாட்சியும், முனீஸ்வரியும் கவினா இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பேசிகொண்டதாக கூறியிருப்பது போலீசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் கூறிய சாட்சியம் என்றால் சரியல்ல. எதிரி கிராம நிர்வாக அலுவலரிடம் சரணடைந்ததாக கூறப்படும் விபரம் எனக்கு நேரில் தெரியாது. போலீசார் சொல்லிதான் தெரியும். அதும் என் மகனும், அ.சா.1 பரமசிவமும், பழனிசாமியும் ஆகியோர்கள் காவல்நிலையம் சென்று கேள்விப்பட்டபிறகுதான் எனக்கு தெரியும் என்றால் ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டதால் எனக்கு தெரியும். நான் கூறும் விபரங்கள் அனைத்தும் தவறு என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தை இறந்த மறுநாள் என் கணவர்

வெளியூரிலிருந்து வீட்டிற்கு வந்துவிட்டார். என்னையும், என் மகனையும் போலீசார் குழந்தையை அடக்கம் செய்த நாளில்மட்டும்தான் விசாரித்தார் என்றால் சரிதான். குழந்தையை அடக்கம் செய்த நாளில் நான் எதிரியையும், அனிதாவையும் பார்க்கவில்லை. அப்போது எதிரியும் எங்களிடம் நன்றாகதான் பேசிக்கொண்டிருந்தார். கவினா இறப்பிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன குழந்தை கவினா மீது அ.சா.1, 2 வீட்டில் இருந்த கனமான பொருட்கள் அவர் மீது விழுந்து அதில் குழந்தை மீளமுடியாமல் கிடந்த கவினாவை அ.சா.1, 2 எடுத்துச்சென்றுள்ள நிலையில் கவினா அ.சா.1, 2 வீட்டில் மூச்சி திணறி இறந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி குழந்தை கவினாவை அவரது வீட்டிற்கு அழைந்து செல்ல எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை பழனிசாமி எங்கள் குடும்ப உறவினர்களின் விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொண்டார் என்பதால் பழனிசாமியிடமிருந்து எதிரியை பிரித்து விடுவதற்காக நாங்கள் அனைவரும் சேர்ந்து குழந்தை இறந்த சம்பவத்தை வைத்து எதிரியை பழனிசாமியை பிரித்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடன் தவறான தகவலை கூறியும், அ.சா.1, 2 வீட்டில் குழந்தை இறந்துபோனதால் அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுவிட கூடாது என்பதற்காகவும், நானும் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் தவறான வாக்குமூலம் தயாரிக்கப்பட்டு அதற்கு அனுசரணையாக நான் போலீசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் முதல் விசாரணை

சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- B.Rajavel,
Principal District Judge,
Tenkasi